தற்காலிகமாக் நிறுத்திவைக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லி இருந்தேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

159—

பேரூராட்சிகளில் நவீனக் கழிப்பிடங்கள் கட்டுதல்

**17552 - திரு. க. அர்ச்சுனன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நகராட்சிகளைப்போல், பேரூராட்சிகளிலும் நவீனக் கழிப்பிடங்கள் கட்டுவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1988- ஆம் ஆண்டு படிப்படியாக பேரூராட்சிகளில் நவீனக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. க. அர்ச்சுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, நவீனக் கழிப்பிடங்கள் பொதுக் கழிப்பிடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன. நகராட்சிகளில் இருப்பதுபோன்று மலிவு விலை கழிப்பிடங்கள் வீட்டுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு கடன் வழங்கப்பட்டால்-பொதுக் கழிப்பிடங்கள், போதிய நீர் இல்லாத காரணத்தினால் பராமரிக்கக்கூடிய நிலை இல்லாத சூழ்நிலையில் பலர் அதைப் பயன்படுத்த முடியவில்லை. எனவே, அந்தந்த வீட்டுக்கு மலிவு விலையில் கடன் கொடுத்து, நகராட்சிகளைப் போல் கழிப்பிடங்களைக் கட்டிக்கொள்வதற்கு வசதி ஏற்படுத்தித் தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் போன்று பேரூராட்சிகளிலும் லோ - காஸ்ட் சேனிடேஷன் என்று சொல்லக்கூடிய அளவிலே அந்தந்த வீட்டு சொந்தக்காரர்களுக்கு கடனாகப் பணத்தைக் கொடுத்து அதன் மூலமாக கழிப்பிடங்கள் செய்து கொடுக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது. அது ஆய்வில் இருந்து வருகிறது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. க. அர்ச்சுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலிவு விலை கக்கூஸ் கட்டுகின்றவர்களுக்கு ஒரு நபருக்கு எவ்வளவு கடன் வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலிவு விலை கட்டணக் கழிப்பிடங்களை பொறுத்தவரை அந்த ஆண்டுக்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு கட்டிடத்தினுடைய தன்மை குறித்தும், அந்தக் கட்டிடத்தினுடைய டிசைனைப் பொருத்தும் மாறுபட்டு வருகிறது. குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 160, திரு. ஆர். பி.பரமசிவம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

160—

தமிழ்நாடு ஓட்டல்களில் இயற்கை உணவகப் பிரிவு ஏற்படுத்தல்.

* 20871—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்நாடு ஓட்டல்களில், இயற்கை உணவகப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமைத்த சைவ உணவையும் இறைச்சி உணவையும் மட்டுமே பொதுவான உணவாகக் கொண்டு இருக்கிற நாம் இந்த வகை உணவால் மாறுபட்ட உணவாக வேறுபட்ட உணவாக நாம் உண்டு உடல்நலம் கருதி காரச்சாறு, அருகம்புல் சாறு, புதினாச் சாறு, கொத்தமல்லிச் சாறு, காப்பரிசி, அவல் போன்ற பொங்கல் வகைகளையும் உணவாகக் கொண்டு உடல்நலம் பேணுவதால் இந்த இயற்கை உணவை விரிவாக தமிழ்நாடு உணவு விடுதியில் ஏற்படுத்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அமைச்சர் மூலம் தெரிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாடு ஓட்டல்களில் வரும்